# M M FORGINGS LIMITED

SVK TOWERS, A 24/25, THIRU VI KA INDUSTRIAL ESTATE, GUINDY, CHENNAI- 32
Phone: 91-44-71601000 E-Mail: corporate@mmforgings.com CIN L51102TN1946PLC001473

Date :15 August 2023

| | |
|---|---|
| The Deputy General Manager<br>Corporate Relationship Department.<br>Bombay Stock Exchange Limited,<br>Rotunda Building, P.J. Towers,<br>First Floor, New Trading Wing, Dalal<br>Street, MUMBAI –400 001 | National Stock Exchange of India Ltd<br>'Exchange Plaza', Bandra – Kurla Complex,<br>Bandra (E), Mumbai – 400 051 |

Dear Sirs,

**Ref.: NSE: security code- MMFL –EQ; BSE: Security Code -522241**

Sub.: Publication of unaudited Financial Results for the quarter ended 30 June 2023

As per Regulation 47 of SEBI (LODR) Regulation 2015, we are enclosing newspaper publication copies of the published unaudited financial results for the quarter ended 30 June 2023 for your records.

Please take it on records.

Thanking you,

Yours faithfully,
For M M FORGINGS LIMITED

Chandra sekar S Digitally signed by Chandrasekar S Date: 2023.08.15 14:59:25 +05'30'

Chandrasekar. S
Company Secretary
Enclosed: as above

### கருத்துக் கருவூலங்கள் உலக மக்களை எளிதில் சென்றடைய

# பேராசிரியர் மா. நன்னனின் நூல்கள் நாட்டுடைமை: ரூ.10 லட்சம் காசோலை வழங்கினார் ஸ்டாலின்

## மனைவி பார்வதி அம்மாள், மகள் முதல்வருக்கு நன்றி

சென்னை, ஆக.14–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (14–ந் தேதி) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் பேராசிரியர் மா. நன்னனின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரின் துணைவியார் ந.பார்வதி அம்மாளிடம் நூலுரிமை பரிவுத் தொகையான 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.




தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 173 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூ.13.87 கோடி நூலுரிமைத் தொகை அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளிலிருந்து இதுநாள்வரை சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார், முருகேச பாகவதர், சங்கரவள்ளி நாயகம், புலவர் செ. இராசு, பேராசிரியர் க. அன்பழகன், முனைவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன், நெல்லை செ.திவான், விடுதலை ராஜேந்திரன், நா. மம்மது, நெல்லை கண்ணன், கந்தர்வன் என்கிற நாகலிங்கம், சோமலே, முனைவர் ந.ராசையா, தஞ்சை பிரகாஷ் ஆகிய 16 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு 2 கோடியே 40 லட்சம் ரூபாய் நூலுரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் 30.7.2023 அன்று சென்னை, சர்.பிட்டி தியாகராயர் கலை மன்றத்தில் நடைபெற்ற பேராசிரியர் மா.நன்னனின் நூற்றாண்டு நிறைவு விழாவில்,நன்னனுடைய நூற்றாண்டை கொண்டாடும் இந்த நேரத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன், தமிழ்நாடு அரசு சார்பில் நன்னனுக்கு புகழ் சேர்கிற வகையில் நன்னனின் புத்தகங்கள் நாட்டுடைமை ஆக்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### கோரிக்கை வைக்கவில்லை நானே அறிவிக்கிறேன்...

நன்னனின் குடும்பத்தினரோ, உறவினர்களோ, வேறு யாரும் கோரிக்கைகளை இந்த நேரத்தில் வைக்கவில்லை. யாரும் வைக்காமல் இந்த கோரிக்கையை நான் அறிவிக்கிறேன் என்று சொன்னால், நன்னன் குடியில் நானும் ஒருவன் என்ற அடிப்படையில், இந்த அறிவிப்பை செய்திருக்கிறேன்" என்று தெரிவித்தார்.

அதற்கிணங்க, பேராசிரியர் மா.நன்னன் எழுதிய நூல்கள், கருத்துக் கருவூலங்கள் உலக மக்களை எளிதில் சென்றடையும் வகையில் அவரின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரது துணைவியார் ந. பார்வதி அம்மாளுக்கு நூலுரிமை பரிவுத் தொகையான 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் இன்றையதினம் வழங்கி, சிறப்பித்தார்.

அமைச்சர் சாமிநாதன்,

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி துறை செயலாளர் இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஔவை அருள், பேராசிரியர் மா. நன்னனின் மகள்கள் வேண்மாள், அவ்வை மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### மகள் வாசித்து அளித்த கவிதை

இந்நிகழ்வின்போது, பேராசிரியர் மா.நன்னனின் மகள் அவ்வை, முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து வாசித்த கவிதை:

முதலமைச்சரவர்களுக்கு உள்ளார்ந்த நன்றி; நன்னனுக்கு நூற்றாண்டு நிறைவு

நிறை வாழ்வு வாழ்ந்த நன்னனுக்கு நான் வந்து வாழ்த்துகிறேன் என்று நிறைவான விழாவாக்கிய முதல்வரே திராவிட உறவைச் சுட்டி பின் தொடரும் உறவைச் சொல்லி எம் தந்தையின் சிறப்பெல்லாம் அன்புடனே தொடர்ந்து பேசிய சீர்மிகு செம்மலே, எழுதிய விரலுக்குக் கணையாழி அன்று எழுத்துகளுக்கு நாட்டுடைமை ஆணை இன்று எங்கும் பரவிப் பயன் விளைக்கும் என்று எல்லார்க்கும் என்றே நிலைத்தது நன்று

நற்றமிழை என்றுமுளத் தமிழாகக் காக்க நல்வழிகாட்டும் பெரியாரின் பெருநெறியை

நன்னன் முறையை நானிலத் துளோரெலாம் நன்கு பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்திட

நாட்டின் உடைமையாய் நானிலத்தின் உடைமையாய் நூல்களை நன்னன் நூல்களை ஆக்கினீர்

நாடி வந்து கோராத போதும் தேடி வந்து நற்செயல் புரிந்த மாண்பைப் போற்றுகிறோம்

நன்னன் குடியினர் நன்றி உணர்கிறோம்

நீவிர் நீடு வாழ்க எழு ஞாயிறாய் வாழ்க, நல்லாட்சித் தொடர நல்லோர் வாழ

நலமுடன் நீவிர் நீடு வாழ்க வாழ்க.

# பிரிவினையின்போது உயிரிழந்த இந்தியர்களை பயபக்தியுடன் நினைவு கூர்வோம்: மோடி டுவீட்

புதுடெல்லி, ஆக.14–

பிரிவினையின்போது உயிரிழந்த இந்தியர்களை பயபக்தியுடன் நினைவு கூர்வோம் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் 14–ந் தேதி பிரிவினை பயங்கர நினைவு தினமாக அனுசரிக்கப்படும் என்று பிரதமர் மோடி கடந்த 2021–ம் ஆண்டு அறிவித்தார்.

பிரிவினை நினைவு தினத்தையொட்டி பிரதமர் மோடி தனது டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:–

நாட்டின் பிரிவினையின் போது உயிர் தியாகம் செய்த இந்தியர்களை பயபக்தியுடன் நினைவு கூர்வோம். இடபெயர்வின் சுமைகளை சுமக்க தள்ளப்பட்டவர்களின் துன்பங்களை யும், போராட்டங்களை யும் இந்த நாள் நமக்கு நினைவூட்டுகிறது. அப்படிப்பட்ட அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்.

இவ்வாறு மோடி கூறியுள்ளார்.

# தமிழகத்தில் இன்றும், நாளையும் இடி, மின்னலுடன் மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஆக.14–

தமிழகத்தில் இன்றும், நாளையும் இடி மின்னலுடன் மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழக பகுதிகளில் மேல் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி, மேற்கு திசை காற்றும், தென் மேற்கு திசை காற்றும் சந்தித்ததன் காரணமாகவே மழை பெய்துள்ளது.

இன்று தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை (15–ந்தேதி) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

16–ந்தேதி முதல் 20–ந்தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இந்தாண்டு இயல்பை விட 6 சதவீதம் மழை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னையை பொருத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 34 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கும்.

இன்றும், நாளையும் தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கி.மீ வேகத்திலும் இடையிடையே 55 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும்.

மீனவர்கள் இந்த நாளில் கடலுக்குள் செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு விவரம் வருமாறு:–

ஜமீன் கொரட்டூர் – 14 செ.மீ., திரூர் – 12 செ.மீ., அம்பத்தூர், ஏசிஎஸ் மருத்துவக் கல்லூரி தலா 11 செ.மீ., பூந்தமல்லி, மதுரவாயல், முகலிவாக்கம், வளசரவாக்கம், அடையார் தலா 10 செ.மீ., சென்னை டி.ஜி.பி. அலுவலகம், விமான நிலையம், ராயபுரம், டி.வி.கே.நகர், கொளத்தூர், நந்தனம் தலா 9 செ.மீ., எம்.ஜி.ஆர். நகர், அண்ணா பல்கலைக்கழகம், கோடம்பாக்கம், தேனாம்பேட்டை தலா 8 செ.மீ., பெரம்பூர், அயனாவரம், ஆலந்தூர், சோழிங்கநல்லூர், சென்னை நுங்கம்பாக்கம், செம்பரம்பாக்கம், அண்ணா நகர் தலா 7 செ.மீ., தாம்பரம், ஆவடி, பெருங்குடி தலா 6 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

### சுதந்திர தினத்தையொட்டி

# 15 போலீஸ் அதிகாரிகளுக்கு சிறப்பு பதக்கங்கள்

## தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஆக. 14–

2023– ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு 15 காவல் துறை அதிகாரிகளுக்கு சிறப்புப் பதக்கங்கள் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து உள்துறை அரசுமுதன்மை செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

பொதுமக்களின் சேவையில் தன்னலம் கருதாமல் சிறப்பாக செயல்பட்டு சீரிய பணியாற்றிய கீழ்கண்ட 5 காவல்துறை அதிகாரிகளுக்கு 2023–ம் ஆண்டு சுதந்திரதினத்தை முன்னிட்டு அவர்களது பணியைப் பாராட்டி சிறந்த பொதுச்சேவைக்கான தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்படும்.

1. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் காவல் துறை இயக்குநர் க. வெங்கடராமன்,

2. சென்னை பெருநகர காவல் காவல்துறை தலைவர், கூடுதல் காவல் ஆணையாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) அஸ்ரா கர்க்,

3. குற்றப்புலனாய்வுத் துறை நுண்ணறிவு, சென்னை காவல்துறை துணைத்தலைவர் சு.ராஜேந்திரன்,

4. இணையவழி குற்றப் பிரிவு, சென்னை பெருநகர காவல். காவல் கூடுதல் துணை ஆணையாளர் ப.ஹீ. ஷாஜிதா,

5. சென்னை. தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை காவல் துணைக் கண்காணிப்பாளர் ஹா. கிருஷ்ணமூர்த்தி,

இதேபோன்று புலன்விசாரணைப் பணியில் மிகச்சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும் கீழ்கண்ட 10 காவல்துறை அதிகாரிகள் தமிழக முதலமைச்சரின் காவல் புலன்விசாரணைக்கான சிறப்புப்பணிப் பதக்கங்கள் வழங்கப்பட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

1. திருப்பூர் மாநகரம். கொங்கு நகர் சரகம், காவல் உதவி ஆணையர் வே. அனில் குமார்,

2. மதுரை சரகம். குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, காவல் துணைக் கண்காணிப்பாளர், கோ. சரவணன்,

3. கோயம்புத்தூர் மாவட்டம். சூலூர் காவல் நிலையம், காவல் ஆய்வாளர், ர. மாதையன்,

4. கோயம்புத்தூர் மாநகரம். பீலமேடு காவல் நிலையம், காவல் ஆய்வாளர், மா. அமுதா,

5. தூத்துக்குடி மாவட்டம். மாசார்பட்டி காவல் நிலையம், காவல் ஆய்வாளர், ம. அனிதா,

6. சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல் ஆய்வாளர், இரா. விஜயா,

7. அரியலூர் மாவட்டம். அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல் ஆய்வாளர், ஆ. மகாலெட்சுமி,

8. திருப்பூர் மாவட்டம். இணைய குற்றப்பிரிவு, காவல் ஆய்வாளர், அ. சித்திராதேவி,

9. சென்னை பெருநகர காவல். நில அபகரிப்பு தடுப்பு பிரிவு, காவல் ஆய்வாளர், ந. மணிமேகலை,

10. திருச்சிராப்பள்ளி. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுதுறை, மறைந்த காவல் ஆய்வாளர் கு. சிவா,

விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு கிராம் எடையுடன் கூடிய தங்கப்பதக்கமும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசும் வழங்கப்படும். மேற்கண்ட விருதுகள், முதலமைச்சரால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மத்திய பிரதேசம் கத்னி மாவட்டத்தில் குளத்தில் மூழ்கி 4 சிறுவர்கள் பலி : ரூ.4 லட்சம் நிதி உதவி

போபால், ஆக.14–

குளத்தில் மூழ்கி 4 சிறுவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மத்திய பிரதேச மாநிலம் கத்னி மாவட்டத்தில் உள்ள நைக்வா கிராமத்தை சேர்ந்த 4 சிறுவர்கள் கிராமத்திலிருந்து 3 கிமீ தொலைவில் அமைந்துள்ள குளத்திற்கு குளிக்க சென்றனர். குளத்தின் ஆழம் தெரியாமல் குளித்ததால் ஒருவர் பின் ஒருவராக நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

இது குறித்து தகவலறிந்த காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின் உள்ளூர்வாசிகளின் உதவியுடன் சிறுவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஸ்லீமனாபாத்தில் உள்ள சுகாதார மையத்திற்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

4 பேர் யார் – யார், எங்கிருப்பவர்கள் என்று அடையாளம் தெரிய வந்துள்ளது. 4 பேரும் 12 வயது சிறுவர்கள்.

துணை மாஜிஸ்திரேட் மற்றும் பிற அதிகாரிகள் உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர். இறுதி சடங்கிற்கு நிதியுதவியாக ரூ.4 ஆயிரம் கொடுத்தனர். மேலும் இன்று மாலை உதவித்தொகையாக ரூ.4 லட்சம் அளிப்பதாக உறுதி அளித்துள்ளனர்.

**CHENNAI MEENAKSHI MULTISPECIALITY HOSPITAL LIMITED**
**(Formerly Known as Devaki Hospital Limited)**
**CIN: L85110TN1990PLC019545**
**Regd. Office: New No.70 (Old No.149), Luz Church Road, Mylapore, Chennai - 600 004**
**Ph: +91 44 42938938, Fax: +91 44 24993282, Email: cmmhospitals@gmail.com, Website: www.cmmh.in**

**Extract of Unaudited Financial Results (Standalone) for the Quarter ended 30th June, 2023**

(₹ in Lakhs)

| PARTICULARS | Quarter ended 30-Jun-2023 Unaudited | Year ended 31-Mar-2023 Audited | Quarter ended 30-Jun-2022 Unaudited |
|---|---|---|---|
| Total Income from Operations (net) | 664.54 | 2891.92 | 642.78 |
| Net Profit / (Loss) from Ordinary Activities before tax | 1.51 | 89.05 | 3.56 |
| Total Comprehensive Income | 1.51 | 89.85 | 3.56 |
| Equity Share Capital (Face value of ₹.10/- per share) | 746.89 | 746.89 | 746.89 |
| Reserves (excluding Revaluation Reserve as shown in the Balance Sheet of previous year)* | | | |
| Earnings Per Share (EPS) (not annualised) (Face Value of ₹.10/- per share) | | | |
| Basic EPS (in ₹.) | 0.02 | 1.19 | 0.05 |
| Diluted EPS (in ₹.) | 0.02 | 1.19 | 0.05 |

* Reserves (excluding revaluation reserve) as on 31st March, 2023 was (-) Rs.733.73 lakhs.

**Notes:**

1. The above results have been reviewed and recommended for adoption by the Audit Committee and approved by the Board of Directors at their meeting held on 12th August,2023.

2 The above is an extract of the detailed format of Financial Results for the Quarter ended on 30.06.2023 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarter ended Financial Results are available on the Stock Exchange Website (www.bseindia.com) and on the Company's website (www.cmmh.in)

For and on behalf of Board of Directors of
CHENNAI MEENAKSHI MULTISPECIALITY HOSPITAL LIMITED
R.GOMATHI
MANAGING DIRECTOR

**Place: Chennai**
**Dated: 12th August, 2023**

**வருவாய் கோட்டாட்சியர்**
**திருவள்ளூர்**

P. அபிஷேக்
ராஜீவ் காந்தி நகர், சிஆர்பிஎப்,
ஆவடி, சென்னை – 600 065

...மனுதாரர்

மனுதாரர் **அபிஷேக்** P சென்னை – 600 065, ஆவடி, ராஜீவ் காந்தி நகர், 7வது குறுக்குத் தெரு, எண்.4 என்ற முகவரியில் வசிக்கும் பரிசாபோகு இஸ்ராயேல் – அச்சாம்மாள் ஆகியோருக்கு 13.11.2004 அன்று மகனாக பிறந்தார். இந்த நிலையில் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பிறப்பை பதிவு செய்ய தவறிவிட்டார். தற்போது அவருக்கு மேற்படிப்புக்கு பிறப்புச் சான்றிதழ் தேவைப்படுவதால், மேற்படி பிறப்பினை பதிவு செய்து கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் தங்கள் ஆட்சேபணையை 15 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ, அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

**அபிஷேக் P., மனுதாரர்**

## எம்எம் போர்ஜிங்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: ஏ25,எஸ்விகே டவர்ஸ், 8வது தளம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை 600 032.
Ph : 91-44-71601000 corporate@mmforgings.com CIN151102TN1946PLC001473

(ரூ. கோடியில்)

| விவரங்கள் | ஒருங்கிணைந்தது | | | |
|---|---|---|---|---|
| | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
| | 30-06-2023 | 31-03-2023 | 30-06-2022 | 31-03-2023 |
| | தணிக்கை செய்யாதது | தணிக்கை யானது | தணிக்கை செய்யாதது | தணிக்கை யானது |
| 1. செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 375.43 | 393.01 | 343.62 | 1153.86 |
| 2. வரி, விலக்கு மற்றும் அல்லது அசாதாரண அயிட்டங்களுக்குமுன் சாதாரண நடவடிக்கை மூலம் நிகர லாபம்/(நஷ்டம்) | 40.25 | 46.52 | 37.73 | 176.50 |
| 3. வரி, விலக்கு மற்றும் அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின் சாதாரண நடவடிக்கை மூலம் நிகர லாபம்/(நஷ்டம்) | 40.25 | 46.80 | 37.73 | 176.95 |
| 4. வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 29.00 | 30.83 | 28.32 | 127.94 |
| 5. சமபங்கு மூலதனம் | 2414.08 | 2414.08 | 2414.08 | 2414.08 |
| 6. பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் | | | | |
| (ஏ) அடிப்படை ரூ. | 12.01 | 12.77 | 11.73 | 53.00 |
| (பி) டைலூட்டட் ரூ. | 12.01 | 12.77 | 11.73 | 53.00 |

குறிப்புகள்:
SEBI (எல்ஓடிஆர்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்ட 30 ஜூன் 2023–ல் முடிந்த காலாண்டுக்கான ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் www.nseindia.com, மற்றும் www.bseindia.com மற்றும் இணையதளம் www.mmforgings.comல் உள்ளது. கம்பெனி ஒரே ஒரு செயல்பாடுகளில் மட்டும் ஈடுபட்டுள்ளது. தேவையான இடங்களில் புள்ளிவிவரங்கள் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன.

தேதி : 12 ஆகஸ்ட், 2023
இடம்: சென்னை

குழுவின் சார்பாக
வித்யாசங்கர் கிருஷ்ணன்
துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்

## தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

CIN: - L17111TZ1977PLC000776
பதிவு அலுவலகம்: ஓமலூர் ரோடு, ஜாகீர் அம்மாபாளையம், சேலம்–636 302.

**30 ஜூன் 2023ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த 3 மாதங்கள் 31.03.2023 (தணிக்கை யானது) | முடிந்த 3 மாதங்கள் 30.06.2023 (தணிக்கை யாகாதது) | முடிந்த 3 மாதங்கள் 30.06.2022 (தணிக்கை யாகாதது) | முடிந்த ஆண்டு 31.03.2023 (தணிக்கை யானது) |
|---|---|---|---|---|---|
| 1 | ஏ) செயல்பாடுகளிலிருந்து வருமானம் | 74.26 | 76.34 | 73.10 | 290.94 |
| | பி) இதர வருமானம் | 1.65 | 0.26 | 0.98 | 3.95 |
| | **மொத்த வருமானம்** | 75.91 | 76.60 | 74.08 | 294.89 |
| 2 | **செலவுகள்** | | | | |
| | ஏ) கச்சா பொருட்கள் உபயோகம் | - | - | - | - |
| | பி) வர்த்தக பொருட்கள் வாங்கியது | - | - | - | - |
| | சி) முடிக்கப்பட்ட பொருட்களின் சரக்குகளில் மாற்றங்கள், நடைபெற்று வரும் பணிகள் மற்றும் வர்த்தக இருப்பு | - | - | - | - |
| | டி) ஊழியர் நல செலவுகள் | 14.02 | 14.82 | 9.55 | 66.94 |
| | இ) நிதி செலவுகள் | 47.31 | 37.68 | 39.61 | 173.71 |
| | எப்) தேய்மானம் மற்றும் அமார்டைசேஷன் செலவுகள் | 13.85 | 13.46 | 13.33 | 53.85 |
| | ஜி) மற்ற செலவுகள் | 68.84 | 28.47 | 28.73 | 191.94 |
| | **மொத்த செலவுகள்** | 144.02 | 94.43 | 91.22 | 486.44 |
| 3 | நிதி கட்டணங்களுக்கு பின் ஆனால் அசாதாரண அயிட்டங்களுக்கு முன் சாதாரண செயல்பாடுகள் மூலம் லாபம்/(நஷ்டம்) (1–2) | (68.11) | '17.83) | (17.14) | (191.55) |
| 4 | விலக்கு அயிட்டங்கள் | 1.57 | - | - | 9.39 |
| 5 | சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு முன் லாபம்/ நஷ்டம் (3–4) | (66.54) | (17.83) | (17.14) | (200.94) |
| 6 | வரி செலவுகள் | - | - | - | 23.48 |
| 7 | சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு பின் நிகர லாபம்/நஷ்டம் | (66.54) | (17.83) | (17.14) | (224.42) |
| 8 | இதர விரிவான வருமானம் | | | | |
| | i) லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படாத அயிட்டங்கள் | - | - | - | - |
| | ii) லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படாத அயிட்டங்கள் தொடர்பான வருமான வரி | - | - | - | - |
| | i) லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படும் அயிட்டங்கள் | - | - | - | - |
| | ii) லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படும் அயிட்டங்கள் தொடர்பான வருமான வரி | - | - | - | - |
| 9 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (7+8) | (66.54) | (17.83) | (17.14) | (224.42) |
| 10 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ஒன்று ரூ. 10/–) | 1,152.56 | 1,152.56 | 576.28 | 1,152.56 |
| 11 | மறுமதிப்பீட்டு நீங்கலான இதர ஈக்விடி பேலன்ஷீட்டில் குறிப்பிட்டுள்ளபடி | - | - | - | - |
| 12 | ஒரு பங்கு சம்பாத்தியம் (முகமதிப்பு ஒன்றுக்கு ரூ. 10–) (வருடாந்திரமல்ல) அடிப்படை மற்றும் டைலூட்டட் | (0.59) | (0.15) | (0.30) | (3.69) |

**ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை**

(ரூ. லட்சத்தில்)

| | | விவரங்கள் | 30.06.2023 | 31.03.2023 |
|---|---|---|---|---|
| | | **ஆஸ்திகள்** | | |
| (1) | | **நடப்பு சாரா ஆஸ்திகள்** | | |
| | ஏ. | சொத்து, நிலம் மற்றும் இயந்திரங்கள் | 1320.65 | 1234.25 |
| | பி. | நடைபெற்று வரும் மூலதன வேலை | - | 17.17 |
| | சி. | இதர இன்டேஜிபிள் ஆஸ்திகள் | - | - |
| | டி. | நிதி ஆஸ்திகள் | | |
| | | i) முதலீடுகள் | – | – |
| | | ii) கடன் மற்றும் முன் பணங்கள் | 11.48 | 11.48 |
| | | ii) இதர நடப்பு சாரா சொத்துக்கள் | - | - |
| | இ. | ஒத்திவைக்கப்பட்ட வரி ஆஸ்திகள் (நிகரம்) | - | - |
| (2) | | **நடப்பு ஆஸ்திகள்** | | |
| | ஏ. | பொருள் விவரப் பட்டியல் | - | - |
| | பி. | நிதி ஆஸ்திகள் | | |
| | | i) பணம் மற்றும் பணத்திற்கு இணையானவை | 54.07 | 117.41 |
| | | ii) வர்த்தகம் பெறுதல்கள் | 21.48 | 24.88 |
| | | iii) மற்றவை | 1.34 | 5.85 |
| | சி. | நடப்பு வரி ஆஸ்திகள் (நிகரம்) | 35.51 | 27.77 |
| | டி. | இதர நடப்பு ஆஸ்திகள் | | |
| | | மொத்த ஆஸ்திகள் | **1444.53** | **1438.81** |
| | | **ஈக்விடி மற்றும் பொறுப்புகள்** | | |
| | | **ஈக்விடி** | | |
| | ஏ. | ஈக்விடி பங்கு மூலதனம் | 1152.55 | 1152.55 |
| | பி. | இதர ஈக்விடி | (1762.84) | (1745.01) |
| | | **பொறுப்புகள்** | | |
| 1. | | **நடப்பு சாரா பொறுப்புகள்** | | |
| | ஏ. | நிதி பொறுப்புகள் | | |
| | | i) கடன்கள் | 1388.92 | 1320.52 |
| | பி. | இதர நடப்பு சாரா பொறுப்புகள் | 387.70 | 388.00 |
| | சி | ஒதுக்கீடுகள் | 23.30 | 23.30 |
| 2. | | **நடப்பு பொறுப்புகள்** | | |
| | ஏ. | நிதி பொறுப்புகள் | | |
| | | i) வர்த்தகம் செலுத்தல் | 61.48 | 75.93 |
| | | ii) இதர நிதி பொறுப்புகள் | 193.42 | 223.52 |
| | பி. | இதர நடப்பு பொறுப்புகள் | | |
| | சி | ஒதுக்கீடுகள் | | |
| | | **மொத்தம் சமம் மற்றும் பொறுப்புகள்** | **1444.53** | **1438.81** |

குறிப்புகள்:
1. கம்பெனி குத்தகை வாடகை வருமானம் என்ற ஒரே பகுதியாக செயல்படுகிறது. எனவே தனி அறிக்கை தேவையில்லை.
2. 30.06.2023 அன்று முதலீட்டாளர் புகார் குறித்த நிலை:
காலாண்டு துவக்கத்தில் நிலுவை: இல்லை. காலாண்டில் பெறப்பட்டது: இல்லை, காலாண்டில் தீர்க்கப்பட்டது : இல்லை, தீர்க்கப்படாமல் உள்ளது : இல்லை.
3. எங்கெல்லாம் தேவையோ அங்கு கடந்த காலாண்டு/ஆண்டு முடிவுகள் ரீகுரூப் செய்யப்பட்டுள்ளன.
4 மேற்கண்ட முடிவுகள் 11 ஆகஸ்ட், 2023 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**இடம் : சேலம்**
**தேதி : 11.08.2023**

**தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டிற்காக**
**நிர்வாக இயக்குனர்**



# 'Double iSmart' second schedule begins in Thailand

Ustaad Ram Pothineni, Puri Jagannadh, Charmme Kaur, Puri Connects Crazy Indian Project Double iSmart Second Schedule Begins In Thailand

Ustaad Ram Pothineni and sensational director Puri Jagannadh's crazy Indian project Double iSmart is progressing at a rapid pace with its shoot. The ongoing second schedule of the movie is happening in Thailand with the team canning important sequences on the lead cast.

Bollywood star Sanjay Dutt who is playing an important and lengthy role in the movie joined the team in the first shooting schedule in Mumbai. The Bollywood star is there with the team for the second schedule. We can see the happy faces of Ram, Sanjay Dutt, Puri Jagannadh, Charmme Kaur, and CEO Vishu Reddy in the images shared by the makers.

Double iSmart which is a sequel to the blockbuster iSmart Shankar in the deadly combination of Ram and Puri, is being produced by Puri Jagannadh and Charmme Kaur under the banner of Puri Connects.

Puri Jagannadh penned a story that has big span and he is presenting the lead actors in completely stylish avatars. Ram sports stylish best look in the movie.

Double iSmart will release in Telugu, Tamil, Kannada, Malayalam, and Hindi languages for Maha Shivaratri on March 8, 2024.

# Meghalaya organises caravan tourism awareness workshop



Meghalaya, Aug 14: The tourism department of Meghalaya organized a "Caravan Tourism Awareness Workshop" in Shillong on August 10. The workshop focused on the burgeoning field of "Caravan Tourism" and equip potential stakeholders with essential knowledge and tools to thrive in this evolving landscape.

Besides providing a broad idea about "Caravan Tourism", the workshop also discussed about necessary certifications, manufacturing and government support.

It helped gain insights into the required certifications and regulatory frameworks for establishing and operating caravan tourism businesses. It also facilitated interactions with prominent caravan manufacturers, understanding the technical aspects and innovative features of modern caravans.

Besides these, the workshop also discussed the opportunities in opening caravan tourism business in Meghalaya with the support of the government. It explained about how to leverage the support and initiatives provided by the government of Meghalaya to enhance and expand caravan tourism ventures.

# Union Minister seeks Tripura rly station upgradation

Agartala, Aug 14: Union Minister of State for Empowerment and Social Justice Pratima Bhoumik sought action from Union Minister of Railways AshwiniVaishnav regarding upgradation of railway service in Tripura and requested to start more trains to the specific destinations for the convenience of the devotees and traders, Bhoumik said media here on Saturday.

Bhoumik told the minister that she had visited Deogharrecently and met the authority of Anukul Thakur Ashram who asked her to arrange another train from Tripura to Deoghar to manage the travel ofdevotees. A weekly train is currently operating from Agartala to Deoghar, as a result, devotees who go to Deoghar have to wait at least seven days to return.

"The minister agreed to run one more trainto Deoghar soon," she stated adding that a large number of devotees from Tripura visit Sri Lanka Bihari Dham Vrindavan and Jagannath Dham Puribut there are no direct train services and she demanded to start atleast one weekly train for their convenience.

"Also as there isno dedicated train running from Agartala to Guwahati yet, I requested the Railway Minister to run a train on this route and he immediately directed officials to make quick arrangements to run a demo train on Agartala and Guwahati routes. This will benefit the businessmen of thestate, increase the number of tourists in the state and also benefit the students from the state who travel to Guwahati for various exams," she added

# Santhy Balachandran lines up serveral projects



Very rarely, the movie industry comes across actresses looking befittingly perfect in both traditional and voguish characters. Such performers have been celebrated with acclaim and positive reception from critics and general audiences.

Actress Santhy Balachandran's brilliant performance as Nivi in the latest outing 'Sweet Kaaram Coffee', an Amazon original web series, has won her critical acclaim and love from the audiences.

Her memorable performance as Sophie in the Lijo Jose Pelliserry film Jallikattu which was India's official entry to the Oscars is also well-known. She has now become the cynosure of leading filmmakers, producers, and actors, who feel that she can easily pull off diverse and challenging roles.

Santhy Balachandran's talent is not confined to the realm of acting. She has proved her mettle as a writer through the experimental music video 'Oblivion', which was released by A.R. Rahman. Currently, she is also scripting a feature film as a co-writer.

Santhy Balachandran has also made her mark on stage with critically acclaimed performances in plays such as The Lover and A Very Normal Family.

Now the actress hopes to win the hearts of film lovers as a performer. She has lined up several promising projects, and the official announcements will soon be made by the respective production houses.

# Ayush Visa launched for foreign travellers




Chennai, Aug 14: The creation of a new visa category, Ayush Visa has been created by the Ministry of Home Affairs for foreign nationals, who are keen to visit the country for medical treatment including therapeutic care, wellness and yoga in India.

The introduction of this special visa will meet the purpose of introducing a special visa scheme for foreigners visiting India for treatment across different streams.

Reports add that Ayush Visa aims to fulfil the need for introduction of a special visa scheme for foreigners. Referring to this, Union Minister of Ayush Sarbananda Sonowal added that this new initiative will help boost medical tourism in India, and will strengthen their endeavour of making Indian traditional medicine a global phenomenon.

Earlier, in 2022, PM Modi had announced creation of Ayush Visa, seeking to make it a part of India's roadmap for the Heal in India initiative of the government.

Later, the Ministry of Ayush and the Ministry of Health & Family Welfare collaborated to develop a one-stop Heal in India portal to promote India as one of the top medical tourism destinations in the world.

# Dulquer Salmaan's 'King Of Kotha' trailer



Chennai, Aug 14: Dulquer Salmaan is known for his strong gangster films. "King Of Kotha," his upcoming biggie, is touted to be an epic gangster saga and is one of the most talked about films in his career. The makers launched the film's trailer in Tamil, Malayalam, Hindi and Telugu today.

The 2.5-minute-long video opens with a voice saying that Dulquer Salmaan's character aims to be a notorious gangster since his childhood, which is a subtle 'Goodfellas' touch by the maker. Dulquer Salmaan plays Raju, a footballer and don who rules the crime capital Kotha. The film chronicles the rise and fall of Raju and how he reclaims his throne in Kotha.

The trailer has ample mass moments for Dulquer Salmaan to pique the audience's interest towards the movie. King Of Kotha is not only a story of a gangster but also a tale about the place and its people. We are introduced to prominent characters in the land of Kotha in the brilliantly cut trailer with rich visuals and a scintillating musical score.

# Victory Venkatesh starrer 'Saindhav' shoot wrapped up

Victory Venkatesh, Sailesh Kolanu, Venkat Boyanapalli, Niharika Entertainment's Prestigious Project 'Saindhav' High Octane Emotional Climax Wrapped

Producer Venkat Boyanapalli showed his passion for cinema with his maiden production venture Shyam Singha Roy which was made lavishly.

The producer is mounting his new film Saindhav starring Victory Venkatesh prestigiously under the banner of Niharika Entertainment with HITverse fame filmmaker Sailesh Kolanu. Other cast includes Nawazuddin Siddiqui, Shraddha Srinath, Ruhani Sharma, Andrea Jeremiah, Sara

Saindhav marks the milestone 75th movie of Venkatesh and the makers are taking utmost care and are making it in an uncompromised manner. The makers introduced almost all the main characters of the movie including- Nawazuddin Siddique, Shraddha Srinath, Ruhani Sharma, Andrea Jeremiah, and Sara.

Santosh Narayanan helms the music, while S Manikandan cranks the camera. Garry BH is the editor and Avinash Kolla is the production designer. Kishore Thallur is the co-producer.

Saindhav is a Pan India movie that will release in all southern languages and Hindi during Christmas on December 22nd.

# 'Skanda' to release on Sept 15 in 5 languages



Blockbuster Maker Boyapati Sreenu, Ustaad Ram Pothineni, Sreeleela, Srinivasaa Chitturi, Srinivasaa Silver Screen's Skanda Shooting Wrapped Up

The post-production works are happening at a fast pace. Since it is a Pan India project, they want to promote it vigorously in other languages across the country.

While the teaser and title glimpse received a tremendous response, the first single Nee Chuttu Chuttu is a chartbuster. The song scored by S Thaman has topped all the music charts. Ram and Sreeleela amazed one and all with their graceful and elegant dance moves in the song.

Santosh Detake cranks the camera for the film produced prestigiously by Srinivasaa Chitturi on a massive budget with high production values and top-notch technical standards under Srinivasaa Silver Screen banner. It is presented by Zee Studios South and Pavan Kumar. Editing is handled by Tammiraju.

Skanda is getting ready for release worldwide on September 15th in Telugu, Tamil, Kannada, Malayalam, and Hindi languages.


**MM FORGINGS LIMITED**

A25, SVK Towers, Sth Floor, Industrial Estate, Guindy, Chennai 600 032

Phone: 91-44-7l601000 corporate@nmforginps.com

CIN:LSI 102TNI946PLC001473

(₹ in crores)

| SR. NO | PARTICULARS | CONSOLIDATED | | | |
|---|---|---|---|---|---|
| | | Quarter ended | | | year ended |
| | | 30-06-2023 | 31-03-2023 | 30-06-2023 | 31-03-2023 |
| | | Unaudited | Audited | Unaudited | Audited |
| 1 | Total Income from Operations | 375.43 | 393.01 | 343.62 | 1153.86 |
| 2 | Net Profit /(Loss) from ordinary activities before tax, Exceptional and or Extraordinary items | 40.25 | 46.52 | 37.73 | 176.50 |
| 3 | Net Profit /(Loss) from ordinary activities before tax, after Exceptional and or Extraordinary itens | 40.25 | 46.80 | 37.73 | 176.95 |
| 4 | Net Profit /(Loss) for the period after tax (after extraordinary activities) | 29.00 | 30.83 | 28.32 | 127.94 |
| 5 | Equity share capital | 2414.08 | 2414.08 | 2414.08 | 2414.08 |
| 6 | Earnings Per Share (a) Basic ₹<br>b) Diluted ₹ | 12.01<br>12.01 | 12.77<br>12.77 | 11.73<br>11.73 | 53.00<br>53.00 |

**Notes:**

The above is an extract of the detailed format of Consolidated unaudited financial results for the quarter ended 30 Jun 2023 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (LODR) Regulations 2015. The full format of tlhe Financial Results are available at www.nscindia.com, www.bscindia.com and www.mmforgings.com. The Company is engaged in only one segment.

Figures have been regrouped wherever necessary.

For and on behalf of the Board
Vidyashankar Krishnan
Vice Chairman and Managing Director

Date: 12.Aug 2023
Place: Chennai